NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 13 January 2021

ஊழியர்கள், வேலைகள் தொடர்பில் மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்னம்

# குறைந்த ஊதியம் பெறுவோரை கவனித்துக்கொள்ள வேண்டும்

குறைந்த ஊதியம் ஈட்டும் ஊழியர்கள் தொடர்பில் பேசிய மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்னம், "அவர்களை நாம்தான் கவனித்துக்கொள்ள வேண்டும்," என்றார்.

அத்தியாவசிய சேவை வழங்கும் ஊழியர்களின் முக்கியத்துவம், கொவிட்-19 நெருக்கடி காலத்தில் நன்கு உணரப்பட்டது. ஊழியரணியில் ஆகக் கடைசி நிலையில் இவர்கள் இருக்க, இவர்களது ஊதிய வரம்பை உயர்த்துவதே முக்கிய சவாலாக உள்ளது என்றார் திரு தர்மன்.

ஒன்றிணைந்த சமூகத்தை உருவாக்கும் பொருட்டு இவ்வாறு ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்றும் கொவிட்-19 சூழலில் வெளிப்பட்ட அதே ஒருமைப்பாட்டு உணர்வுடன் சிங்கப்பூர் செயல்பட்டு, குறைந்த ஊதிய ஊழியர்களுக்கு மேலும் சிறந்த சூழலை உருவாக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமுதாயக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சருமான திரு தர்மன், கொள்கை ஆராய்வுக் கழகம் நேற்று ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

ஊழியரணியின் இறுதி 20 விழுக்காட்டினராக உள்ள இந்த குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்கள், கடந்த 10 ஆண்டுகளில் தங்களின் சம்பளம் 40% அதிகரித்துள்ளதை உணர்ந்திருப்பர் என்று அவர் சுட்டினார். நடுத்தர வருமானம் ஈட்டும் சிங்கப்பூரர்கள், கடந்த 20 ஆண்டுகளில் 65% அதிகரிப்பைத் தங்களின் சம்பளத்தில் காண முடிந்ததையும் அவர் சுட்டினார். எனவே, நடுத்தர வருமானப் பிரிவினருக்கு ஏற்பட்ட வருமான உயர்வு போல் குறைந்த வருமான ஊழியர்களுக்கும் ஏற்படச் செய்வது சவால்மிக்க ஒன்றாகும் என்றார் அமைச்சர்.

எனவேதான், படிப்படியான சம்பள உயர்வு முறை திட்டம் வழி, அரசாங்கம் அதன் முத்தரப்பு பங்காளிகளுடன் இணைந்து இக்குறிப்பிட்ட பிரிவினரின் சம்பளத்தை உயர்த்த முனைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மூத்த ஊழியர்களிடம் பாரபட்சம் வேண்டாம்

மூத்த ஊழியர்கள் என்று வரும்போது அவர்களிடத்தில் பாரபட்சம் காட்ட வேண்டாம் என்று திரு தர்மன் நேற்றைய மாநாட்டில் முதலாளிகளைக் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சிந்தனை இன்னமும் சிங்கப்பூர் முதலாளிகளிடம் உள்ளது என்றார் அவர்.

இதற்குப் பதிலாக, அரசாங்கத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு இத்தகைய ஊழியர்களுக்கு முதலாளிகள் வேலையும் பயிற்சியும் அளிக்கலாம் என்றும் அவர் யோசனை கூறினார். வேலைகளை நிரப்புவதற்குப் போதிய ஊழியர்கள் இல்லாததே தற்போதைய ஊழியர் சந்தை. இதை ஆராயும்போது, இவ்வாறு திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்வது ஊழியர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சாதகமாக அமையும் என்றார்.

ஏற்கெனவே, குறிப்பிடத்தக்க திறன்கள் கொண்ட ஊழியர்களை வேலைக்கு எடுத்து, அவர்களுக்குப் புதுத் திறன் பயிற்சி அளித்து, திறன்களை மேம்படுத்திட முதலாளிகள் முன்வர வேண்டும் என்றார் அவர். அனுபவமிக்கவர்கள், உழைக்கத் தயாராக இருப்பவர்கள், கற்றுக்கொள்ள முன்வருபவர்கள் ஆகியோர் சிங்கப்பூரில் உள்ளனர் என்றும் சொன்னார்.

இதனாலேயே வேலை வளர்ச்சி ஊக்குவிப்புத் திட்டம் போன்றவற்றை அரசாங்கம் இத்தகைய மூத்த ஊழியர்களுக்குப் பலனளிக்கும் வகையில் அமைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இருப்பினும், இத்தகைய திட்டங்களைப் பயன்படுத்த முதலாளிகளின் சிந்தனையில் மாற்றம் தேவை என்றார்.

## சமூக முன்னேற்றத்தை உறுதிசெய்ய வேண்டும்

அமெரிக்காவின் நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்துமீறிச் சென்ற சம்பவம் தொடர்பிலும் மாநாட்டில் பேசப்பட்டது. முன்னேற்றமடைந்த பல நாடுகளில், நடுத்தர வர்த்தகத்தினரிடையே வாழ்க்கைத் தரம் மாற்றம் ஏதும் இல்லாமல் இருப்பதை ஆர்ப்பாட்டக்காரர்களின் செயல் மூலம் உணர முடிந்ததாக திரு தர்மன் குறிப்பிட்டார்.

"ஒரே கட்டத்தில் வெகுக் காலமாக சிக்கியிருப்போர், அவர்களுக்குப் பின்னால் இருந்தவர்கள் அவர்களின் நிலைக்கு முன்னேறுவதைக் காணும்போது அச்சமடைவர். தங்களுக்கு முன்னால் இருப்போரை அடைவதிலும் அதே அச்ச உணர்வு ஏற்படும்," என்றார்.

அதனால் மேல்நோக்கிச் செல்லும் நகரும் படிக்கட்டு சிங்கப்பூரில் இருப்பது அவசியம் என்றார் அவர். இதனால் சமூக முன்னேற்றம் மேம்படும். மக்களும் அதிகளவில் கவலைப்படமாட்டர் என்றார் மூத்த அமைச்சர் தர்மன்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.